**Spl.CC.No.80/2019**

**06-03-2020** ஆம் தேதி அன்று சாட்சி **P.W.1** மீண்டும் மனுவின் பேரில் **(CMP.No. 628/2020)** மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டுஎதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**.**

எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் இவ்வழக்கு சோதனையின்போது திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் துணைக் கண்காணிப்பாளராக நான் பணியாற்றி வந்தேன்**.** நான் காவல் துறையில் **1979** ஆம் வருடம் பணியில் சேர்ந்தேன்**.** சோதனை என்பது பற்றி எனக்கு தெளிவாக தெரியும்**.** குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு **100** ல் சொல்லப்பட்டுள்ள வகைகளின்படி சோதனை மேற்கொள்ளப்படவேண்டுமென்றால் சரிதான்**.** கு**.**வி**.**மு**.**ச**.**பிரிவு **165(3)**ன்படி கோயமுத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கூடுதல் கண்காணிப்பாளர் எனக்கு உத்திரவு கொடுத்தார் என்றால் சரிதான்**. Ex.P.1** தான் அந்த உத்திரவு என்றால் சரிதான்**. Ex.P.1** உத்திரவில் அதில் எதிரியின் முகவரியாகச் சொல்லப்பட்டுள்ள முகவரியில் உள்ள வீட்டை சோதனை செய்து அங்கு **Material object** மற்றும் ஆவணங்கள் இருந்தால் அவற்றை கைப்பற்றும்படி சொல்லப்பட்டிருந்தது என்றால் சரிதான்**. Ex.P.1** யில் எதிரியின் முகவரியாகச் சொல்லப்பட்டுள்ள எதிரியின் வீட்டின் அமைவிடம் குறித்து எனக்கு ஏற்கனவே தெரியுமா என்றால் இல்லை**.** எதிரி தமிழக அமைச்சராக இருந்தார் என்ற விவரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியும்**.** எதிரி அமைச்சராக ஆவதற்கு முன்பாக சட்டம் மன்ற உறுப்பினராகவும்**,** நிலக் கிழாராகவும்**,** பல வியாபாரங்களை செய்தும் வந்தார் என்ற விவரம் எனக்குத் தெரியுமா என்றால் சட்ட மன்ற உறுப்பினராக இருந்தார் என்பது குறித்து மட்டும் எனக்குத் தெரியும்**.** எதிரி வருமான வரி செலுத்தி வந்தாரா என்ற விவரமும் எனக்குத் தெரியாது**. Ex.P.1** ன் தேதி **28.11.2011** ஆகும்**. 28.11.2011** அன்றே **Ex.P.1** எனக்கு கிடைக்கப் பெற்றது**. Ex.P.1** ஆவணத்தை எங்கு என்னிடம் கொடுத்தார்கள் என்றால் கோயமுத்தூர் ஊழல் தடுப்பு பிரிவு அலுவலகத்தில் என்னிடம் கொடுத்தார்கள்**.** நான் **28.11.2011** ஆம் தேதி

அன்றே சோதனை குறித்து அறிவுறுத்தல்களை நான் பெற்றேனா என்றால் ஆம். எந்த நேரத்தில், யாரிடமிருந்து நான் சோதனை குறித்த அறிவுறுத்தல்களைப் பெற்றேன் என்றால் அன்று இரவு பெற்றேன். நேரம் தற்பொழுது நினைவில் இல்லை. கோவை கூடுதல் காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு பிரிவு அவர்களிடமிருந்து அறிவுறுத்தல்களைப் பெற்றேன். அப்போதைய எனது உயர் அதிகாரியிடம் நான் சோதனை குறித்து அனுமதி பெற்றேனா என்றால், என்னுடைய உயர் அதிகாரியான தெற்கு சரக காவல் கண்காணிப்பாளர் மற்றும் தமிழ்நாடு முழுமைக்கான ஊழல் தடுப்பு துணை இயக்குனர் ஆகியோர்களிடம் அனுமதி பெற்றேன். எந்த தேதியில் அவ்வாறு அனுமதி பெற்றேன் என்றால் **28.11.2011** ஆம் தேதி பெற்றேன். **Ex.P.1** உத்திரவை வாங்கியபிறகுதான் நான் என் உயர் அதிகாரியிடம் அனுமதி வாங்கினேனா என்றால், என்னை கோவைக்கு சோதனை பொருத்து செல்லுமாறு **28.11.2011** ஆம் தேதி காலை என்னை அறிவுறுத்திய போதே மேற்படி தெற்கு சரக கண்காணிப்பாளர் அவர்களிடமும், துணை இயக்குனர் அவர்களிடமும் அனுமதி பெற்று விட்டேன். எழுத்து மூலமாக அவ்வாறு அனுமதி வாங்கினேனா என்றால், அது பற்றி கேட்டபோது அனுப்பி வைப்பதாக அந்த அதிகாரிகள் சொன்னார்கள். அவ்வாறு அனுப்பி வைப்பதாக சொன்ன அனுமதி எனக்கு கிடைத்ததா என்றால் கிடைக்கப்பெறவில்லை. இவ்வழக்கு சம்மந்தமான புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையின் நகல் ஆகியவற்றை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையின்படி இவ்வழக்கில் புகார் கொடுத்தவர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திருமதி வி.சண்முகபிரியா என்றால் சரிதான். இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்ததும் திருமதி வி.சண்முகபிரியாதான் என்றால் சரிதான். சோதனை மற்றும் கைப்பற்றுதலுக்கான சாட்சிகளை **(PW.2** மற்றும் **PW.3)** எனக்கு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திருமதி.வி. சண்முகபிரியா அவர்கள் அவரது அலுவலகத்தில் வைத்து **29.11.2011** ஆம் தேதி அதிகாலை அறிமுகப்படுத்தி வைத்தார். **Ex.P.1** ன்படி சோதனை செய்வதற்கு எனக்கு மட்டுமே அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது என்றால்

சரிதான். நான் சோதனை செய்வதற்காக எனக்கு கீழ் ஒரு குழுவை ஏற்படுத்தி கொண்டேன் என்றால், சோதனையில் எனக்கு உதவி செய்வதற்காக அவ்வாறு குழு ஏற்படுத்திக் கொண்டேன். அந்த குழுவில் யார், யார் இடம் பெற்றிருந்தார்கள் என்றால், அப்போது என் கீழ் பணியாற்றிய ஆய்வாளர் திரு.பாண்டித்துரை மற்றும் **5** அல்லது **6** காவலர்கள் இருந்தார்கள். அவ்வாறு குழு ஏற்படுத்துவதற்கு குற்றவியல் நடைமுறைச்சட்டப்படி நான் ஏதாவது நடவடிக்கை உத்திரவு பிறப்பித்துக் கொண்டேனா என்றால், குற்றவியல் நடைமுறை சட்டத்தில் அதற்கான வழிமுறை ஏதும் இல்லை. குற்றவியல் நடைமுறைச் சட்டம் **165(3)**ன்படி சோதனை செய்வதற்காக எனக்கு கீழ் பணிபுரியும் அதிகாரிகளை கொண்ட ஒரு குழு அமைக்க வேண்டுமென்றால் அதற்கு நடவடிக்கை உத்திரவு பிறப்பித்துக் கொண்டிருக்கவேண்டும் என்றால், அவ்வாறு நானே எனக்கு உத்திரவு பிறப்பித்துக் கொள்ள இயலாது. எதிரியின் வீட்டை குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் சொல்லியுள்ளபடி சோதனை செய்த போது எதிரியின் வீட்டைச் சுற்றியுள்ள வீடுகளை பார்வையிட்டேனா என்றால் இல்லை. எதிரியின் வீட்டைச் சுற்றிமதிப்புமிக்க நபர்கள் வசித்து வருகிறார்களா என்பது பற்றி விசாரித்தேனா என்றால் இல்லை. குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் சோதனையின்போது மதிப்புமிக்க நபர்களின் முன்னிலையில் சோதனை நடத்தப்படவேண்டுமென்றும், அவர்களை சான்றுரைஞர்களாக காண்பிக்கவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

கேள்வி - எனது சோதனை முழுவதும் எதிரி வசித்து வரும் வீட்டின் பகுதியில் வசித்து வரும் மதிப்புமிக்க நபர்கள் முன்னிலையில் சோதனை செய்யப்படவில்லை என்றாலும், அவர்களை சான்றுரைஞர்களாக வைத்து சோதனை செய்யப்படவில்லை என்றால், அவர்களிடம் சோதனை குறித்த ஆவணங்களில் சாட்சி கையொப்பம் பெறவில்லை?

பதில் - ஏற்கனவே என் வசம் ஒரு கிராம நிர்வாக அலுவலர் உள்ளிட்ட இரு மதிப்பு மிகு சாட்சிகள் இருந்ததால், சோதனைக்கு உட்படுத்தப்பட்ட வீட்டின் பகுதியிலிருந்து வேறு சாட்சி யாரையும் நான் அழைக்கவில்லை. அதனால் அவர்களிடம் சோதனை பட்டியலில் கையொப்பம் பெறும் கேள்வி எழவில்லை.

கோவை ஊழல் தடுப்பு மற்றும் காவல் கண்காணிப்பு பிரிவு, கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அறிமுகம் செய்த இரண்டு அரசு சாட்சிகள் (PW.1 and PW.2) மற்றும் அவர் கொடுத்த **Ex.P.1** வேண்டுகோளின்படிதான் சோதனை மேற்கொண்டுள்ளேன் என்றால் சரிதான். குற்றவியல் நடைமுறைச் சட்டப்படி நான் எதிரியின் வீட்டில் சோதனை மேற்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. சோதனையில் **43** அசல் ஆவணங்களை பார்வையிட்டுள்ளேன் என்றால் சரிதான். சோதனையின்போது **13** எண்ணிக்கையிலான தங்க ஆபரணங்களை பார்வையிட்டேன் என்றால் சரிதான். அந்த **43** அசல் ஆவணங்களை நான் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். சோதனையின்போது நான் பார்வையிட்ட **13** எண்ணிக்கைகளிலான தங்க ஆபரணங்களை நான் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். **Ex.P.1** வேண்டுகோள் கடிதத்தில் அசல் ஆவணங்கள் கைப்பற்றக் கூடாது என்றோ, ஆபரணங்களை கைப்பற்றக் கூடாது என்றோ அறிவுறுத்தல் ஏதாவது சொல்லப்பட்டுள்ளதா என்றால் அவ்வாறு குறிப்பாக சொல்லப்படவில்லை. **43** அசல் ஆவணங்களின் புகைப்பட நகல்களை எடுப்பதற்கு முன்பாக பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் வரைந்தேனா என்றால், சோதனை பட்டியலின் உள்ளடக்கமாக பார்வை மகசரை தயார் செய்தேன். ஆனால் மாதிரி வரைபடம் எதுவும் தயார் செய்யவில்லை. **43** ஆவணங்களுக்கான நகல்களை கைப்பற்றியதற்காக மகசர் ஏதும் தயார்செய்தேனா என்றால், மேலே குறிப்பிட்டுள்ள சோதனை பட்டியலின் உள்ளடக்கமான மகசரே அந்த மகசராக அமைந்ததால் தனியாக நான் வேறு ஒரு மகசர் தயார் செய்யவில்லை. **Ex.P.3** சோதனை பட்டியலில் எனக்கு உதவியாக இருந்த ஆய்வாளர் பாண்டித்துரை கையொப்பம் செய்துள்ளாரா என்றால், சோதனை பட்டியலில் உள்ளடக்கமான அந்த மகசரில் அவர் கையொப்பம் செய்துள்ளார். கூடுதல் காவல் கண்காணிப்பாளர் என்னை விசாரித்த போது எனது குழு குறித்து அவரிடம் சொன்னேனா என்றால் அது பற்றி எனக்கு தற்பொழுது ஞாபகமில்லை. சோதனையின்போது ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியாவில் உள்ள லாக்கர் சாவி கைப்பற்றினேன் என்றால் சரிதான். அந்த சாவி யாருடைய சாவி என்றால், விஜயலட்சுமி என்பவரது பெயர் உள்ள அட்டை அத்துடன்

இணைக்கப்பட்டிருந்தது. மேற்படி விவரத்தை கூடுதல் காவல் கண்காணிப்பாளர் என்னை விசாரித்த போது அவரிடம் சொல்லியுள்ளேனா என்றால் தற்போது ஞாபகமில்லை. மேற்படி லாக்கர் சாவியை கூடுதல் காவல் கண்காணிப்பாளரிடம் ஒப்படைக்கும்போது மகசரில் விஜயலட்சுமியின் பெயர் அந்த சாவியில் அட்டையில் எழுதப்பட்டிருக்கிறது என்ற விவரத்தைச் சொல்லியுள்ளேன். எனது சோதனையில் எதிரியின் குடும்ப உறுப்பினர்களின் ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதா என்றால், ஆவணங்களின் நகல்கள் கைப்பற்றப்பட்டது. தங்க ஆபரணங்கள் பார்வையிட்ட சமயத்தில் தங்க மதிப்பீட்டாளர் யாரையாவது அழைத்து எடை பார்த்தேனா என்றால் இல்லை. லாக்கர் சாவி எந்த வங்கியில் உள்ள லாக்கர் குறித்தது, அது யாருடைய பெயரில் உள்ளது என்பது குறித்து அந்த வங்கிக்குச் சென்று விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால், அவ்வாறு புலன் விசாரணை செய்ய எனக்கு உத்திரவு வழங்கப்படவில்லை. எதிரி வீட்டில் நான் செய்த சோதனை சமயத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான ஆட்சி முடிந்து அ.தி.மு.க. தலைமையிலான ஆட்சி தமிழகத்தில் நடந்து கொண்டிருந்தது என்றால் சரிதான். தி.மு.க. கழகத்தின் ஆட்சி முடிவுற்ற பிறகு அ.தி.மு.க. கட்சியின் ஆட்சி அமைக்கப்பட்ட பிறகு தமிழகத்தில் தி.மு.க. ஆட்சியில் இருந்த முன்னால் அமைச்சர்களின்மீது ஊழல் தடுப்புச் சட்டத்தின்கீழ் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால், எல்லா தி.மு.க. முன்னால் அமைச்சர்களின்மீதும் அவ்வாறு வழக்கு பதிவு செய்யப்படவில்லை. பெரும்பாலான தி.மு.க. முன்னால் அமைச்சர்களின்மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால், தற்பொழுது அது குறித்து என்னால் நினைவு கூற இயலவில்லை. எதிரி வீட்டை நான் செய்த சோதனை குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் சொல்லியுள்ள வரைமுறைகளின்படி இல்லை என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> இல்லை

ஒம்/அம்பிகாவதி

**Spl.CC.No.80/2019**

**06-03-2020** ஆம் தேதி அன்று சாட்சி **P.W.2** வாசு மீண்டும் மனுவின் பேரில் **(CMP.No.628/2020)** மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை

**28.11.2011** ஆம் தேதி நான் சிங்காநல்லூர் கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்தபேது யாரது அழைப்பின்பேரில் நான் ஊழல் தடுப்பு பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளரை பார்த்தேன் என்றால் வட்டாட்சியரின் உத்திரவின்பேரில் சென்று பார்த்தேன். வட்டாட்சியர் எழுத்து மூலமாக எனக்கு உத்திரவு ஏதும் கொடுத்தாரா என்றால் இல்லை. கூடுதல் காவல் கண்காணிப்பாளர் எனக்கு என்ன அறிவுறுத்தல்களை வழங்கினாரோ அதன் அடிப்படையில் நான் நடந்து கொண்டேனா என்றால் ஆம். கூடுதல் காவல் கண்காணிப்பாளர் எனக்கு எழுத்து பூர்வமான அறிவுறுத்தல்கள் ஏதேனும் வழங்கினாரா என்றால் இல்லை. இவ்வழக்கு சம்மந்தமாக அரசு சாட்சியாக நான் இருக்கவேண்டுமென சொன்னார்களா என்றால் ஆம். இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையை நான் வாங்கி படித்துப் பார்த்தேனா என்றால் படித்துப் பார்க்கவில்லை. கூடுதல் காவல் கண்காணிப்பாளர் **PW.1** திரு.அம்பிகாவதி, துணைக் காவல் கண்காணிப்பாளரை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். எந்த தேதியில் அவ்வாறு அறிமுகம் செய்து வைத்தார் என்றால் **28.11.2011** ஆம் தேதியில் அறிமுகம் செய்து வைத்தார். **29.11.2011** ஆம் தேதி கோவை ஊழல் தடுப்பு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு காலை **5** மணிக்கு சென்றேன். டி.எஸ்.பி திரு.அம்பிகாவதி அவர்களுடன் பட்டு வளர்ச்சி துறை அலுவலகத்திலிருந்து வந்த மாணிக்கம் என்பவர் அங்கு இருந்தார். டி.எஸ்.பி திரு.அம்பிகாவதி, நான், மாணிக்கம் மற்றும் காவலர்கள் எதிரியின் வீட்டிற்குச் சென்றோம். எத்தனை காவலர்கள் எங்களோடு

வந்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தற்பொழுது சரியாக ஞாபகமில்லை. எதிரியின் வீட்டிற்கு பக்கத்தில் உள்ளவர்களை யாரையாவது அழைத்தார்களா என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. டி.எஸ்.பி அம்பிகாவதி எதிரியின் வீட்டு ஒவ்வொரு அறைக்கும் சென்று சோதனையிட்டார். எந்த, எந்த அறையில் என்ன, என்ன இருந்தது என்பது பற்றி எனக்கு ஞாபகமில்லை. என்ன, என்ன ஆவணங்களை எடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. எனக்கு சரியாக ஞாபகமில்லை. லாக்கர் சாவிகளை எடுத்தார்கள் என்று சொல்லியுள்ளேன். **13** வகையான நகைகள் இருந்தது என சொல்லியுள்ளேன். அந்த **13** வகையான நகைகளின் விவரம் எனக்குத் தெரியாது என்றால் சரியல்ல. எனக்கு தற்பொழுது அந்த விவரம் ஞாபகமில்லை. நகைகளை தங்க மதிப்பீட்டாளரை வரவழைத்து எடை போட்டு பார்த்தார்களா என்றால் அதைப் பற்றி தற்பொழுது எனக்கு ஞாபகமில்லை. பார்வை மகசரை எழுதி எனக்கு படித்துக் காண்பித்தார்களா என்றால், ஆம் படித்துக் காண்பித்தார்கள். பார்வை மகசரில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்ற விவரம் எனக்குத் தெரியுமா என்றால் எனக்குத் தெரியும். எதிரியின் வீட்டில் என்ன, என்ன கைப்பற்றினோம் என்பது பற்றி எழுதினார். அந்த பார்வை மகசரை காண்பித்தால் அதன் விவரங்களை தற்போது சொல்ல முடியும். லாக்கர் கீயில் விஜயலட்சுமி என்று எழுதப்பட்டிருந்தது. அது சம்மந்தமான லாக்கரை பார்த்தேனா என்றால் வங்கிக்கு சென்றிருந்தபோது பார்த்தேன். எப்பொழுது வங்கிக்குச் சென்றிருந்தேன் என்றால் **15.12.2011** ஆம் தேதியில் வங்கிக்கு சென்றிருந்தேன். அப்பொழுது **PW.1** திரு.அம்பிகாவதி, டி.எஸ்.பி எங்களோடு வந்தாரா என்றால் டி.எஸ்.பி எங்களோடு வரவில்லை. என்னோடு வந்த அதிகாரி யார் என்றால் கூடுதல் துணைக் காவல் கண்காணிப்பாளர் வந்திருந்தார். ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியாவில் அவ்வாறு சென்று பார்த்த லாக்கர் யாருடைய லாக்கர் என்றால் இந்து முருகேசன் என்பவரது லாக்கர் ஆகும். இந்து முருகேசனின் லாக்கர் என யார் சொன்னார்கள் என்றால் வங்கியின் மேலாளர் சொன்னார். கூடுதல் காவல் கண்காணிப்பாளர் கேட்டுக் கொண்டதன்பேரில்தான் நான் வங்கிக்குச் சென்றேன். அவ்வாறு வங்கிக்கு சென்றபோதும்

வட்டாட்சியரிடம் நான் அங்கு செல்வதற்காக வேண்டி எழுத்து மூலமான அனுமதி எதுவும் பெறவில்லையா என்றால், ஆம் பெறவில்லை.

<u>மறு விசாரணை</u> இல்லை

ஒம்/வாசு

**Spl.CC.No.80/2019**

**06-03-2020** ஆம் தேதி அன்று சாட்சி **P.W.3** மாணிக்கம் மீண்டும் மனுவின் பேரில் **(CMP.No. 628/2020)** மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டுஎதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் **28.11.2011** ஆம் தேதி நான் பட்டு வளர்ச்சி துறையில் ஜுனியர் இன்ஸ்பெக்டராக பணிபுரிந்து வந்தேன். **28.11.2011** ஆம் தேதி அன்று கோவை ஊழல் தடுப்பு மற்றும் கூடுதல் கண்காணிப்பாளர் அலுவலகத்திதற்கு யார் உங்களை செல்லச் சொன்னார்கள் என்றால் பட்டு வளர்ச்சி துறையின் உதவி இயக்குனர் என்னை அங்கு செல்லுமாறு சொன்னார். எழுத்து மூலமாக உதவி இயக்குனர் எனக்கு உத்திரவு ஏதும் கொடுக்கவில்லை. வாய்மொழியாகத்தான் சொன்னார். **28.11.2011** மற்றும் **29.11.2011** ஆகிய இரண்டு நாட்களிலும் நான் கோவை ஊழல் தடுப்பு கூடுதல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்குச் சென்றேன். ஏ.டி.எஸ்.பி அவர்கள் சொன்ன அறிவுறுத்தல்களின்படி நான் நடந்தேன். எனது உயர் அதிகாரியும் ஏ.டி.எஸ்.பி செல்லும் அறிவுறுத்தலின்படி செயல்படவேண்டுமென்றுதான் சொல்லி அனுப்பினார். என்னை அரசு சாட்சியாக நின்று கையொப்பம் செய்யும்படி கேட்டார்கள் என்றால் சரிதான். **28.11.2011** ஆம் தேதி நான் ஏ.டி.எஸ்.பி அலுவலகத்திற்கு சென்றிருந்தபோது **PW.1** அம்பிகாவதி அங்கு இருந்தாரா என்றால், அவர் அங்கு இருந்ததுபோல் எனக்கு ஞாபகமில்லை. **29.11.2011** ஆம் தேதி காலை **5** மணியிலிருந்து **6** மணிக்குள்ளாக நான் ஏ.டி.எஸ்.பி அலுவலகத்திற்கு சென்றிருந்த போது அங்கு ஏ.டி.எஸ்,பி திருமதி.சண்முகபிரியா அவர்கள் அங்கிருந்த டி.எஸ்.பி திரு.அம்பிகாவதி அவர்களையும் மற்றொரு இன்ஸ்பெக்டரையும், கிராம நிர்வாக

அலுவலர் வாசு என்பவரையும் எனக்கு அறிமுகப் படுத்தி வைத்தார். இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையை நான் படித்துப் பார்க்கவில்லை. சோதனை எதற்காக நடக்கிறது என்ற விவரம் எனக்குத் தெரியாது என்றால் சரியல்ல. சொத்து குவிப்பு வழக்கு என்று என்னிடம் சொன்னார்கள். யார் சொன்னார்கள் என்றால் ஏ.டி.எஸ்.பி அலுவலகத்தில் சொத்து குவிப்பு வழக்கு என்று பேசிக் கொண்டிருந்தார்கள். ஏ.டி.எஸ்.பி அலுவலகத்திலிருந்து காலை சுமார் **6** மணிக்கு புறப்பட்டோம். காலை சுமார் **6.55** மணிக்கு எதிரியின் வீட்டிற்குச் சென்றடைந்தோம். நாங்கள் அனைவரும் எதிரியின் வீட்டிற்குச் சென்று ஒரே அறையில்தான் அமர்ந்து இருந்தோம். உட்கார்ந்திருந்த அறையிலேயே எழுதினார்களா என்றால் உட்கார்ந்து இருந்த அறையிலேயேதான் ஒவ்வொரு ஆவணமாக எடுத்து அதன் விவரத்தை எழுதினார்கள். ஒவ்வொரு அறையிலும் என்ன, என்ன பொருட்கள், ஆவணங்கள் எடுத்தார்கள் என்ற விவரம் எனக்குத் தெரியாது என்றால் சரியல்ல. சோதனை முடிந்து சுமார் **10** வருடங்கள் ஆவதால் அது பற்றி எனக்கு சரியாக ஞாபகமில்லை. எதிரியின் வீட்டைப் பார்த்து வரைபடம், பார்வை மகசர் தயார் செய்தார்களா என்றால் அது மாதிரி தயார் செய்ததாக எனக்கு நினைவில்லை. **43** ஆவணங்கள் கைப்பற்றியதாக நான் முதல் விசாரணை சாட்சியத்தில் சொல்லியுள்ளேன். அது என்ன, என்ன ஆவணங்கள் என்று என்னால் தற்பொழுது சொல்ல முடியுமா என்றால் அது தற்பொழுது ஞாபகத்தில் இல்லை. அந்த ஆவணங்கள் அசல் ஆவணங்களா அல்லது புகைப்பட ஆவணங்களா என்றால் அசல் ஆவணங்களை எடுத்து ஒரு காவலர் மூலமாக புகைப்பட நகல் எடுத்து வரச் சொன்னார்கள். புகைப்பட நகல் எங்கு எடுத்தார்கள் என்ற விவரம் எனக்குத் தெரியாது. அந்த புகைப்பட ஆவணங்களின் விவரங்களை இன்ஸ்பெக்டர்தான் எழுதினாரா என்றால் இன்ஸ்பெக்டர் எழுதியதாகத்தான் நினைவில் உள்ளது.

எதிரியின் வீட்டில் தங்க நகைகளை எடுத்தார்கள். அதை பார்த்துவிட்டு மீண்டும் எதிரியின் குடும்பத்தாரிடமே ஒப்படைத்து விட்டார்கள். என்ன, என்ன நகைகளை எடுத்துப் பார்த்தார்கள் என்ற விவரம் சொல்ல முடியுமா என்றால் அது பற்றி எனக்கு சரியாக ஞாபகமில்லை. அந்த நகைகளை எடை போட்டு பார்க்கவில்லை. ஸ்டேட் பேங்க் லாக்கரின் சாவியை எங்கிருந்து எடுத்தார்கள் என்றால் பீரோவில் இருந்து எடுத்தது போன்று நினைவில் உள்ளது. யாரது பெயரில் அந்த சாவி இருந்தது என்றால் விஜயலட்சுமி என்பவரது பெயர் சாவியோடு இருந்த சீட்டில் எழுதப்பட்டிருந்தது. அந்த சாவியை டி.எஸ்.பி எடுத்தாரா என்றால் அது பற்றி எனக்கு ஞாபகமில்லை. சோதனை முடிந்த பிறகு நான், டி.எஸ்.பி, கிராம நிர்வாக அலுவலர் வாசு, இன்ஸ்பெக்டர் ஆகிய அனைவருமே ஏ.டி.எஸ்.பி அலுவலகத்திற்கு வந்தோமா என்றால் ஆம் வந்தோம். ஏ.டி.எஸ்.பி என்னை அன்றைய தினம் விசாரித்தாரா என்றால் விசாரித்தார். **28.11.2011** ஆம் தேதியிலிருந்து ஏ.டி.எஸ்.பி என்னை விசாரிக்குமான காலத்தில் எத்தனை கையெழுத்துக்கள் போட்டேன் என்றால் எழுதிய தாள்களில்தான் கையொப்பம் செய்தேன். எத்தனை எண்ணிக்கையிலான கையொப்பம் என்று எனக்கு தற்பொழுது சரியாக நினைவு படுத்தி சொல்ல முடியவில்லை. ஏ.டி.எஸ்.பி அலுவலகத்தில் எத்தனை கையொப்பம் செய்தேன் என்றால் ஏ.டி.எஸ்.பி அலுவலகத்தில் நான் கையொப்பம் எதுவும் செய்து கொடுக்கவில்லை. சோதனை நடந்த எதிரியின் வீட்டில் வைத்துத்தான் கையொப்பம் செய்து கொடுத்தேன். என்னோடு சேர்ந்து எத்தனை பேர் கையொப்பம் செய்தோம் என்றால் நான் கையொப்பம் செய்தேன். டி.எஸ்.பி கையொப்பம் செய்தார். என்னோடு வந்த கிராம நிர்வாக அதிகாரி வாசு கையொப்பம் செய்தார். நான் கையொப்பம் செய்ததைப்போலவே எல்லா இடத்திலும் மேற்கண்ட நபர்களும் கையொப்பம்

செய்தார்களா என்றால் ஆம் கையொப்பம் செய்தார்கள். சோதனை **28.11.2011** ஆம் தேதி மாலை **3.30** மணிக்கு முடிவடைந்தது. அதன் பிறகு ஏ.டி.எஸ்.பி அலுவலகத்திற்குச் சென்றோம். **28.11.2011** ஆம் தேதி அன்று ஏ.டி.எஸ்.பி அலுவலகத்தில் **15.12.2011** ஆம் தேதிக்கு நான் ஏ.டி.எஸ்.பி அலுவலகத்திற்கு வரவேண்டும் என்று சொன்னார்களா என்றால் அப்போது சொல்லவில்லை. அதற்கு பின்னால் எப்பொழுது மீண்டும் ஏ.டி.எஸ்.பி அலுவலகத்திற்கு வரச் சொன்னார்கள் என்றால் **28.11.2011** ஆம் தேதிக்கு பிறகு ஒரு நாள் என் உயர் அதிகாரி ஏ.டி.எஸ்.பி அலுவலகத்திற்கு செல்லுமாறு சொன்னார். அந்த தேதி தற்பொழுது நினைவில் இல்லை. **15.12.2011** ஆம் தேதி நான் ஏ.டி.எஸ்.பி அலுவலகத்திற்கு செல்லவேண்டுமென எனது உதவி இயக்குனர்தான் எனக்குச் சொன்னார். எழுத்து வழி உத்திரவு எதுவும் எனக்கு உதவி இயக்குனர் வழங்கவில்லை. **15.12.2011** ஆம் தேதி அன்று ஏ.டி.எஸ்.பி அலுவலகத்தில் திருமதி சண்முகபிரியா அவர்கள் இருந்தார்கள். கிராம நிர்வாக அலுவலர் வாசு இருந்தார். மேற்கண்ட நபர்கள் மட்டுமே அன்றைய தினம் நான் ஏ.டி.எஸ்.பி அலுவலகத்திற்குச் சென்ற போது இருந்தார்கள். ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா அலுவலகத்திற்கு யார், யார் சென்றோம் என்றால் நானும், ஏ.டி.எஸ்.பி திருமதி சண்முகபிரியா அவர்களும், வாசுதேவன் அவர்களும் சென்றோம். காவலர்கள் அன்றைய தினம் உதவிக்கு வந்தார்களா என்றால் அவர்கள் ஜீப்பில் அமர்ந்து இருந்தார்கள், வங்கிக்குள் வரவில்லை. வங்கியில் வங்கி மேலாளர் மற்றும் ஒரு வழக்கறிஞர் அங்கு இருந்தார். அங்கு விஜயலட்சுமி என்ற லாக்கர் கீயை யார் கொண்டு வந்தார்கள் என்றால் இந்து முருகேசன் என்பவர் கொண்டு வந்தார். இந்து முருகேசனை யார் அங்கு கொண்டு வரச் சொன்னார்கள் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. அந்த லாக்கர் வெறும் ரூ.**200/-** மட்டுமே (இரண்டு **100**

ரூபாய் தாள்கள்**)** இருந்தது என்றால் சரிதான்**.** அந்த ரூ**.200/-** யை ஏ**.**டி**.**எஸ்**.**பி மேடம் கைப்பற்றினார்களா என்றால் நான் அங்குதான் இருந்தேன்**.** ஆனால் கைப்பற்றினாரா என்ற விவரம் எனக்குத் தெரியவில்லை**.** மகசரில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்ற விவரம் எனக்குத் தெரியாது என்றால் படித்துப் பார்த்து கையொப்பம் செய்தேன்**.** அதில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்ற விவரம் எனக்கு தற்பொழுது சரியாக நினைவில் இல்லை**.** அந்த மகசரில் யார்**,** யார் கையொப்பம் செய்தார்கள் என்றால் நான் கையொப்பம் செய்தேன்**.** கிராம நிர்வாக அலுவலர் வாசு கையொப்பம் செய்தார்**.** ஏ**.**டி**.**எஸ்**.**பி சண்முகபிரியா கையொப்பம் செய்தார்**.** வங்கி மேலாளர் கையொப்பம் செய்தார்**.** ஒரு வக்கீல் அங்கு இருந்தார்**.** அவரும் கையொப்பம் செய்தார்**.** அந்த வக்கீலின் பெயர் எனக்கு ஞாபகமில்லை**.** அதன்பிறகு ஏ**.**டி**.**எஸ்**.**பி சண்முகபிரியாவின் அலுவலகத்திற்குச் சென்றோம்**. 15.12.2011** ஆம் தேதி நானும்**,** வாசுவும் எத்தனை கையொப்பம் செய்தோம் என்றால் ஒரு தாளிலோ அல்லது **2,3** தாள்களிலோ கையொப்பம் செய்ததாக நினைவில் உள்ளது**.** அந்த மகசர் **2,3** தாள்களில் எழுதப்பட்டிருந்தது**.** ஏ**.**டி**.**எஸ்**.**பி என்னை விசாரிக்கும் போது அப்போது யார்**,** யார் இருந்தார்கள் என்றால் கிராம நிர்வாக அலுவலர் வாசு அங்கு இருந்தார்**.**

<u>மறு விசாரணை</u> இல்லை

ஒம்/மாணிக்கம்